கார்ப்பரேஷன் என்றிருப்பதுபோல், ஒரு மோட்டார் டிரான்ஸ் போர்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷனை நிறுவி மாநில போக்குவரத்துப் பெருந்துகளுக்குக் கடன் வழங்கும்போது அதற்கு 4 சதவிகிதம் என்றும் விரைவுப் பெருந்துகளுக்குக் கடன் வழங்கும்போது 12 சதவிகிதம் என்றும் கடன் கொடுக்கலாம் 'differential system of interest rates' என்று சொல்வார்கள். ஆகவே, இதற்கு என்று ஒரு நிதி வாரியமும் வைத்து இந்தத் தொழில் மேம்பாடு அடையச் செய்யவேண்டு மென்று தமிழக அரசின் சார்பில் வற்புறுத்தப்பட்டு அதை எல்லாப் போக்குவரத்துத் துறை அமைச்சர்களும் வரவேற்றார்கள்.

மத்திய அரசு போக்குவரத்துத் துறையும் தீர்மானமாக அதை நிறைவேற்றி அனுப்பியது. ஏற்கனவே சொன்னதுபோல் மத்திய அரசு நிதி இலாக்கா அதை முடியாது என்று நிராகரித்து விட்டது.

மாநிலங்களுக்கிடையே பெருந்துப் பணி

***570 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் நமது மாநிலத்தின் பிரதிநிதிகளுக்கும், கருநாடக மாநில பிரதிநிதிகளுக்கும் இடையில் பஸ் போக்குவரத்து வசதிகளை அதிகரிப்பது குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) அதன் தொடர்பாகக் கருநாடக, தமிழ்நாடு மாநிலங் களுக்கிடையே போக்குவரத்து குறித்து ஒப்பந்தம் ஒன்று 1—5—1973 அன்று இரு அரசிதழ்களிலும் வெளியிடப்பட்டன. அந்த ஒப்பந்தத்தின் நகல் @ அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

@ 780-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப் பட்டுள்ளது.

1974 மார்ச் 22]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, கருநாடக மாநிலத்தின் தலைநகரான பெங்களூரிலிருந்து வருகிற பேருந்துகள் நல்ல லாபத்தில் தமிழ்நாட்டிற்கு வந்து போய்க் கொண்டிருக்கின்றன. காரணம் நம் வழித்தடங்கள் நல்லமுறையில் அமைந்துள்ளன. ஆனால் பெங்களூரில் நம் மையப் பேருந்து நிலையத்திற்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படாமலும் நிலையத்திற்கு வேண்டிய இடம் கூடச் சரியான முறையில் ஒதுக்கப் படாததால் நம் தொழிலாளர்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுவ தாகத் தெரிகிறது. ஆகவே இதைப் பரிசிலனை செய்து உரிய வசதிகளை கர்நாடக அரசு அங்கிருக்கிற தொழிலாளர்களுக்குச் செய்து தர நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கருநாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில் நமக்கு எந்தவிதமான பிரச்னையும் இல்லை. தொழிலாளர்களுக்கு ஏதாவது வசதிகள் செயய வேண்டுமென்ற நிலை ஏற்படுமானல் அதை அரசுப் போக்குவரத்துத் துறை மேற்கொள்ளலாம்.

திரு. எம். தேவராசன் : இந்தப் பேச்சுவார்த்தைகளின் பயனாக உதகைக்கும் பெங்களூருக்கும் இடையே துரிதப் பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? ஏற்கனவே அமைச்சர் அவர்கள் விரைவுப் பேருந்துகள் விடப்படும் என்று சொன்னார்கள். அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : 1972-ல் இந்த ஒப்பந்தம் கருநாடக அரசோடு நாம் செய்துகொண்டோம். ஆனல் இன்டர் ஸ்டேட் ரூட்டை அரசாங்கமே நடத்துவது என்பதைக் கொள்கை ரீதியாக இரு அரசுகளும் ஒப்புக்கொண்டன. இதைத் தனிப்பட்ட பஸ் முதாலாளிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே அந்த ஒப்பந்தத்தை நாம் நோட்டிபிக்கேஷன் செய்தவுடனே அவர்கள் மைசூர் ஹைகோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கிவிட்டார்கள். இப்போதுதான் அண்மையில் அந்த ஸ்டே ரத்து செய்யப்பட்டிருக் கிறது. இனிமேல்தான், மற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பெங்களூரிலிருந்து அடிக்கடி டூரிஸ்ட் பஸ் என்ற பெயரால் நம் மாநிலத்திற்குப் பல வண்டிகள்

வந்து கொண்டிருக்கின்றன. இது சம்பந்தமாக இரு மாநிலங்களுக்குமிடையே ஏதாவது பேச்சுவார்த்தை ஏற்பட்டு ஏதாவது முடிவிற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்த டூரிஸ்ட் பஸ்கள் என்ற பெயரால் அரசாங்கப் பஸ் போக்குவரத்து நிறுவனங்களுக்குப் பேரிழப்பு ஏற்படுகிறது என்பதைத் தமிழ்நாடு மட்டுமல்ல கர்நாடக அரசும் ஒப்புக்கொண்டு இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற அடிப்படையில் இரு மாநிலங்களுக்குமிடையே ஓடுகிற பேருந்துகள் அரசாங்கப் பேருந்துகளாக அமைய வேண்டும் என்பதைக் கொள்கை ரீதியில் இரண்டு மாநிலங்கள் மட்டுமல்ல தென்னகத்தைப் பொறுத்த வரையில் நான்கு மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர்களும் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

THIRU B. VENKATASWAMI : Even after the agreement, the people in Hosur are finding it difficult to go to Bangalore and other places for various purposes. May I know from the Hon. Minister for Transport whether he would see that the buses from Hosur to Bangalore, Hosur to Royakota, Hosur to Denkanikota and Hosur to Krishnagiri are increased? I understand that the people are suffering a lot because of scarcity of buses from Hosur?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The difficulty is not the scarcity of buses. We wanted to increase the number of trips to Bangalore. The problem is the whole agreement is pending before the High Court. Some private operators have gone to the Court forstay. Very recently information has been received that the stay has been vacated by the High Court of Karnataka and action will be taken shortly.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விணக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]